# வாழ்வகம்

## விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

## அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவு நாளும் நினைவுப் பேருரையும் - 13

## 2019



**"யாழ் குடாநாட்டின் நீர் வளங்களும் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுப் பொறிமுறைகளும்"**

நினைவுப் பேருரையாளர்:

**எந்திரி. சர்வானந்தன் சர்வராஜா**

நீர்ப்பாசனப் பொறியியலாளர், யாழ்ப்பாணம்,

நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்குமாகாணம்.

**11.09.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியே ஒளி
கல்வியே வழி

# வாழ்வகம்
# விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

## அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி
## நினைவு நாளும் நினைவுப்பேருரையும் - 2019
## நினைவுப்பேருரை - 13

"யாழ் குடாநாட்டின் நீர் வளங்களும்
தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளும்
அவற்றுக்கான தீர்வுப் பொறிமுறைகளும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வகம்
# விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

## மகுட வாசகம்

*கல்வியே ஒளி கல்வியே வழி*

## Motto

Education is light Education is path

## தூரநோக்கு

*விழிப்புல வலுவிழந்தவர்களை கல்வியின் ஊடாக அறிவாற்றலும் செயற்றிறனும் வாழ்வின் சவால்கள் அனைத்தையும் எதிர்கொள்ளக் கூடிய சமநிலை ஆளுமையும் மிக்கவர்களாக்குதல்.*

## Vision

*To empower visually handicapped to devolop the potential balanced personality with knowledge and efficiancy for facing the challenging life through education*

## பணிக்கூற்று

விழிப்புலவலுவிழந்தவர்கள், கல்வியின் ஊடாக உள்ளத் தெளிவு பெற்று முழுமையாகத் தம்மை அறிவதன் மூலமாக கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு ஏனையவர்கள் யாவருக்கும் கிடைக்கும் அதே உரிமைகளையும் வாய்ப்புக்களையும் சமமாகப் பெற்று சிறந்த பண்புத்தரத்துடன் வாழ வழிசெய்தல்.

## Mission

*To prepare visually handicapped to pave the way for living with good qualities using available resources in oder to have equal opportunities and rights like others have by getting purity of mind and realizing themselves completely through education*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வக அன்னை



அமரர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

(வாழ்வக ஸ்தாபகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வக அன்னையின் முதன்மை மாணவரும்**
**வாழ்வகத்தை வழிநடத்திச்செல்ல**
**அன்னையால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும்...**




**திரு.ஆறுமுகம் ரவீந்திரன் (JP) அவர்கள்**
(BA, PGDE,M Ed, SLTES III)
விரிவுரையாளர்
கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி
(தலைவர் வாழ்வகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்வக அன்னை துதி

**பல்லவி**

ஒளி காட்டியே எங்கள் வழிகாட்டியே தெளிவோடு
வழிசேர்த்த வழிகாட்டியே

**அனுபல்லவி**

அன்னை அன்னலட்சுமியைப் போற்றுவோம்
அவர் நினைவிலெமை உரு வாக்குவோம்.
(ஒளிகாட்டியே......)

**சரணங்கள்**

பார்வையிலா மனிதரென்ன நடைப்பிணங்களா
பாரிலவர்க் குதவிடுவோர் எவரும் இல்லையா
ஆர் வருவார் என்றிருந்த வேளையிலே
ஆதரிக்க அன்னை வந்தார் கடவுள்போலவே
(ஒளி காட்டியே......)

கல்வி தந்தார் கவின் கலைகள் பயிற்றுவித்தார்
கண்போலக் காத்தவையில் முந்தவைத்தார்
பல்விதமாய்த் தொழில் பலவும் கற்றுயர்ந்தே
பண்புநிறை இன்பவாழ்வை எமக்களித்தார்.
(ஒளி காட்டியே......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வகமாம் கனிமரத்தை நாட்டிவைத்தார் - அதில்
வந்தமரும் குஞ்சுகளுக்கு ஊட்டிவிட்டார்
ஆள் உலகை என்றுதெம்பாய் ஆசிகூறி
ஆற்றலராய் உலகில்நட மாடவைத்தார்.

(ஒளி காட்டியே......)

அன்னையாகினார் எங்கள் தந்தையாகினார்
ஆதரித்து அருளுகின்ற தெய்வமாகினார்
பின்னை யாவரும் போற்றும் வண்ணமாய்
எம்மையாக்கினார் அன்ன லட்சுமி அன்னை.

(ஒளி காட்டியே.....)



**திரு. சுப்ரமணியம் ஸ்ரீகுமரன் (இயல்வாணன்)** SLEAS

உதவிக்கல்விப் பணிப்பாளர்.

வாழ்வக அன்னையின் துதியை யாத்து தனக்கு பெருமைதேடிக் கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி

## தீபமாய் தெய்வமாய்

நமது ஈழமணித் திருநாட்டின் விசேட கல்வி வரலாற்றில் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி என்ற நாமம் எப்போதும் தனித்துவமாய் மிளிர்ந்துகொண்டிருக்கும். "எங்கள் கண்களிலே ஒளியில்லையே." "இந்த ஒளியற்ற கண்களால் இநதப் பரந்த உலகை நாம் எப்படித் தரிசிக்க முடியும்? களிப்புடன் எப்படி வாழ முடியும்? என்று கலங்கிக் கண்ணீர் வடித்து நின்ற பிள்ளைகளின் கரங்களைக் கருணையோடு பற்றி, கல்வி வெளிச்சத்தின் முன் அழைத்துவந்தவர் இந்த அன்னை. மருத்துவ விஞ்ஞானத்தால் உங்கள் கண்களைப் பெற்றுத்தர முடியாது போகலாம். ஆனால், கல்வி என்னும் ஒப்பில்லாக் கண்ணை என்னால் உங்களுக்குத் தர முடியும். அதன் துணையோடு நீங்களும் இந்தக் காசினியில் களிப்போடு வாழமுடியும் என்று தன்னம்பிக்கையோடு உரைத்தார் இந்தத் தாய். வெறும் வார்த்தையோடு மட்டும் நின்றுவிடாமல் தன் பணி வாழ்க்கை மூலம் அதைச் சாதித்தும் காட்டினார்.

1972 ல் இலங்கை ஒன்றிணைக்கப்பட்ட கல்வித் திட்டத்தின் கீழ் ஒரு விசேட ஆசிரியையாய் இணைந்துகொண்ட இவர் விழிப்புல வலுவிழந்த பல பிள்ளைகளை வெற்றிகரமாய்க் கல்வி நீரோட்டத்தில் இணையவைத்தார்.

தன் பணி ஓய்வுக்குப் பின்னரும் தான் வரித்துக்கொண்ட இந்தச் சீரிய பணியை மேலும் வலுவுடன் முன்னெடுக்கவேண்டும் என்னும் நோக்கோடு 29.06.1988 ல் வாழ்வக நிறுவனத்தை உருவாக்கினார்.

தன் இறுதி மூச்சுள்ளவரை விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் நல்வாழ்வுக்காகப் பலவாறு சிந்தித்து அயராது செயற்பட்ட செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் 11.09.2006 இறையடி எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வாழும் காலத்தில் எந்தவிதப் பெயரையோ புகழையோ விரும்பாத இந்த அன்னைக்கு, 2010 ஆம் ஆண்டு தேகாந்த நிலையில் கௌரவ கலாநிதிப் பட்டம்வழங்கியதன் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனக்குப் பெருமை தேடிக் கொண்டது.

திக்கற்றுத்தவித்த விழிப்புலவலுவிழந்த பிள்ளைகளுக்குத் திசை காட்டும் தீபமாய், தெய்வமாய்த் திகழ்ந்த இந்த அன்னை இன்று நம்மோடில்லாவிட்டாலும் அவர் தொடக்கி வைத்த பணிகள் இன்றும் தொடர்ந்தவண்ணமுள்ளன. அவரால் வித்தூன்றப்பட்ட வாழ்வகம் இன்று விருட்சமாய்த் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

உண்மையான சேவையையும் உன்னத மனித நேயத்தையும் நேசிக்கின்றவர்களின் உள்ளங்களில் அன்னை அன்னலட்சுமி சின்னத்தம்பி இன்றும் வாழ்ந்துகொண்டுதான் இருக்கிறார்.

அவரது சேவைக் மேன்மேலும் வளர, வலுப்பெற நாம் அனைவரும் பணிசெய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்
# வாழ்வகமும் அதன் வளம் மிக்க பணிகளும்

பல்வேறுகண் பார்வை இழப்பு அல்லது பாதிப்பு ஒருவருக்குப் பல்வேறு காரணங்களால் ஏற்படக்கூடும். அவ்வாறு ஒருவர் தன் கண் பார்வையை இழந்துவிட்டால் அத்தோடு அவரின் வாழ்வே முடிந்து விட்டது எனக் கருதுவது முற்றிலும் தவறானது. பார்வையற்றவர் களாலும் இவ்வுலகில் மகிழ்ச்சியாக கௌரவமாக வாழமுடியும் என்பது இன்று ஆணித்தரமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இவர்களின் இவ்விதமான நல்வாழ்வுக்குக் கல்வி மிகமிக இன்றியமையாதது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கண்களின் இழப்பை கல்வியால் மட்டுமே ஈடுசெய்ய முடியும். எனினும் இன்றுங்கூட நம் சமூகத்தில் கல்வி வாய்ப்புக் கிடைக்காத விழிப்புல வலுவிழந்த பிள்ளகள் பலர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களின் பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் இப்பிள்ளைகளை எவ்வாறு வழிநடத்துவது, இவர்களுக்கு எவ்வாறு கல்வியூட்டுவது என்பவை தொடர்பாக விழிப்புணர்வு அற்றவர்களாக அல்லது மிகக் குறைந்தவர்களாகவே உள்ளனர். இந்நிலையில் இவ்வாறான பிள்ளைகளைத் தேடிக் கண்டறிந்து இவர்களுக்குப் பொருத்தமான கல்வி வாய்ப்புக்களையும் இதர வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இவர்களையும் கௌரவமான பயன் மிக்க பிரஜைகளாக்கும் நோக்குடனேயே வாழ்வகம் ஸ்தாபிக்கப்பட்டது.

**வரலாறு**

இலங்கை வாழ் தமிழ்பேசும் விழிப்புல வலுவிழந்த பிள்ளை களின் கல்வி வளர்ச்சியிலே காத்திரமான பங்காற்றிய ஒப்பற்ற ஆசிரியையான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களின் அரும்முயற்சியால் வாழ்வகம் 29.06.1988 அன்று தெல்லிப்பழையில் உதயமாயிற்று. தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள வாடகை வீடொன்றில் பதின்மூன்று பிள்ளை களுடன் வாழ்வகத்தின் பணிகள் ஆரம்பமாயின. எனினும் அன்றைய யுத்த சூழ்நிலை காரணமாக 1990 ஆம் ஆண்டு வாழ்வகம் அங்கிருந்து இடம்பெயர நேர்ந்தது.

மீண்டும் 1995 ஆம் ஆண்டு உடுவில் மல்வம் பகுதியில் வாடகை வீடொன்று பெறப்பட்டு அங்கு வாழ்வகத்தின் பணிகள் தொடரலாயின. இருந்தபோதிலும் 1995 ஆம் ஆண்டு மீண்டுமொரு பாரிய இடப்பெயர்வைச் சந்திக்க நேர்ந்தது. கூடவே பெருமளவு பொருள் இழப்புகளும் ஏற்பட்டன. வாழ்வகத்தின் அன்றைய தலைவரும் ஸ்தாபகருமான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் இந்த இடப்பெயர்வுகளைக் கண்டு சற்றேனும் மனம் தளரவில்லை. மானிப்பாய் சத்தியசாயி சமிதியினரின் உதவியோடு மானிப்பாயில் வீடொன்று வாடகைக்குப் பெறப்பட்டு 1997 ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு வாழ்வகத்தின் பணிகள் மீண்டும் அங்கு ஆரம்பமாயின. இவ்வேளையில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள் மேற்கொண்ட அரும் முயற்சியின் பயனாக லண்டனிலுள்ள தமிழ் அனாதைகள் நம்பிக்கை நிதியத்தினரிடமிருந்து வாழ்வகத்துக்கெனச் சொந்தமாக ஒரு காணியைக் கொள்வனவு செய்வதற்கென ஒரு தொகை பணம் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது. இதன் பயனாக வாழ்வகம் 2003 ஆம் ஆண்டு தற்போதைய அதன் சொந்த வதிவிடத்தில் நிலைநிறுத்தப்பட்டது.

## பணிகளும் நலன்புரித் திட்டங்களும்

விழிப்புலவலுவிழந்த பிள்ளைகள் தடையேதுமின்றி தமது கல்வியை மேற்கொள்ளவும் சாத்தியமான இதர வாய்ப்புக்கள் அனைத்தையும் பெற்றுத் தமது வாழ்வை வளப்படுத்திக்கொள்ளவும் வேண்டிய அனைத்து வசதிகளையும் வாழ்வகம் முற்றிலும் இலவசமாக வழங்கி வருகின்றது. தற்போது வாழ்வகத்தில் ஆண், பெண் இருபாலாருமாக நாற்பத்தெட்டு பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் யாவரும் எமது நாட்டின் தற்போதைய கல்வி செல்நெறி களுக்கமைவாக ஏனைய சாதாரண பிள்ளைகளோடு இணைந்து தமது கல்வியினை மேற்கொண்டு வருகின்றனர். பத்து மாணவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பினை மேற்கொண்டு உள்ளனர். மேலும் ஒரு மாணவி பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி யுள்ளார். இவர்கள் தவிர்ந்த ஏனைய மூவர் க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றி அவர்களுள் இருவர் சித்தி பெற்றுள்ளனர். ஏனைய மாணவர்கள் யாவரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் தமது கல்வியை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, தங்குமிடம், அன்றாடப் பாவனைப் பொருட்கள், மருத்துவம், போக்குவரத்து வசதிகள், கல்விக்குத் தேவையான விசேட உபகரணங்கள் போன்ற அனைத்து வசதிகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றன. பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. தேவை கருதி ஒருசில மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கற்பிதற்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது. கணனிக் கல்வி, ஆங்கிலக்கல்வி என்பன பிரத்தியேகமாக அளிக்கப்படுகின்றன. அத்தோடு சங்கீதம், நடனம் போன்ற கலைகளும் பயிற்றுவிக்கப் படுகின்றன.

விழிப்புல வலுவிழந்த மாணவர்களுக்கு விசேடமாக இன்றி யமையாத சுயமாக நடமாடுதல் பொருட்களைக் கையாளுதல், அன்றாட வேலைகளை மேற்கொள்ளல் போன்ற இயக்கத்திறன் சார் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்த உதவுதொகைகள் வழங்கப்படுவதோடு அவர்களின் தேவைகள் யாவுமே வாழ்வகத்தால் பூர்த்திசெய்யப்படுகின்றன.

வாழ்வகத்துக்கு வெளியே உள்ள சாதாரண பாடசாலை களில் பயிலும் வறிய மாணவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் திட்டமொன்றினையும் எமது ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் ஞாபகார்த்தமாக முன்னெடுத்து வருகின்றோம்.

## தேவைகள்

1. விளையாட்டு மைதானம்

வாழ்வகப் பிள்ளைகளுக்க ஒரு விளையாட்டு மைதானம் தேவையாக உள்ளது. இதனைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் மேற்கொண்ட முயற்சிகள் இதுவரை பலனளிக்கவில்லை.

2. விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுக்கான கல்வி விளையாட்டு மற்றும் ஏனைய விசேட உபகரணங்கள் பல இன்னும் தேவையாக உள்ளன.

3. விசேட பயிற்சி பெற்ற ஆளணியினர்

எமது பிள்ளைகளைக் கல்வி மற்றும் ஏனைற துறை களில் பயிற்றவிப்பதற்கான தகுந்த ஆளணியினர் இல்லாத நிலையே பெருமளவில் காணப்படுகின்றது.

## எதிர்காலத் திட்டங்கள்

1. கல்விச் செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்தலும் புதிய புதிய துறைகளில் எமது பிள்ளைகள் கற்பதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தலும்.

2. விளையாட்டுத்துறையில் எமது பிள்ளைகளை வளர்த்தெடுத் தலும் தேசிய சர்வதேச போட்டிகளில் பங்குகொள்வதற்கான வாய்ப் புக்களைப் பெற்றுக்கொடுத்தலும்.

3. யாதேனுமொரு பல்கலைக்கழகத்துடன் இணைந்து விசேட கல்வி தொடர்பான கற்கைநெறியொன்றை ஆரம்பித்தல்.

4. கற்றல் இயலாமையைக் கொண்ட மாணவர்களுக்காகவும் கல்வி வாய்ப்பினை இழந்த விழிப்புல வலுவிழந்தோர்களுக்காகவும் வினைத்திறன் மிக்க சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டமொன்றை ஆரம்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பாடநூல்கள் மற்றும் பொதுவான நூல்களை ஒலிப் புத்தகங்களாக உருவாக்கலும் விநியோகித்தலும்.

**விழிப்புல வலுவிழந்தோரின் மேம்பாட்டுக்காக வாழ்வகத்தின் பணிகள் தொடர்கின்றன, வளர்கின்றன. விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளுக்கான வாழ்வகத்தின் கதவுகள் எப்பே. துமே திறந்திருக்கின்றன.**

வாழ்வக சமூகம்

**தொலைபேசி இலக்கங்கள்: 0212240146, 0768286331**
**வங்கிக் கணக்குகள்:**

1. இலங்கை வங்கி - சுன்னாகம் 7471582 (Swift Code BCEYLKLX)
2. ஹற்றன் நஷனல் வங்கி
   - சுன்னாகம் 117010003186 (Swift Code S-C-HBLILKLX)

**குறிப்பு:**

யாதாவதொரு கண்பார்வையற்ற அல்ல எழுத்துக்களை முகத்துக்கு மிகவும் அருகில் வைத்துப் பார்க்கின்ற அளவுக்கு குறைந்த பார்வையுடைய பிள்ளைகளைப் பற்றிய தகவல்கள் உங்களுக்குத் தெரிந்திருந்தால் தயைகூர்ந்து அவ்விபரங்களை எமக்குத் தாருங்கள். அப்பிள்ளையின் வீடு தேடிச்சென்று வேண்டிய அனைத்து உதவிகளையும் முற்றிலும் இலவசமாக இதயசுத்தியோடு வழங்குவதற்கு வாழ்வகம் எப்போதுமே தயாராக இருக்கின்றது.

**முகவரி:**

தலைவர்,
வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வகத்தில் கல்வி கற்று 2018ல் வேலைவாய்ப்பு பெற்ற மாணவர்கள்



திரு. யோகலிங்கம் சுதாகரன்
(ஆசிரியர்)



செல்வி ஞானசீலன் டில்வியா
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)



செல்வி வெற்றிவேல் தயாளினி
(சமூகசேவை உத்தியோகத்தர்)



செல்வி மார்க்கண்டு ராஜலக்சுமி
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)



செல்வி கிருபானந்ததேவன் ரேகா
(ஆசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் உள்ளத்திலிருந்து.....



இனிய உறவுகளே,

எமது வாழ்வக நிறுவனமானது தனது முப்பத்தோராவது அகவையில் நடை பயின்று கொண்டிருக்கின்றது. நடைமுறைக் கல்விச் செல்நெறிகளுக்கமைவாக விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் கல்விப் பயணத்தை முன்னெடுத்துவரும் ஒரு நிறுவனம் என்ற வகையில் நாம் மிக்கபெருமிதமும் உளப் பூரிப்பும் அடைகின்றோம். இவ்வேளையில், எல்லாம் வல்ல இறைவனையும் இறைநிலையிலிருந்து எம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கின்ற எமது அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அவர்களையும் பணிந்து துதிப்பதோடு, எமது முன்னேற்றங்கள் அனைத்துக்கும் உறுதுணையாயும் உந்து சக்தியாயிருந்து உதவி ஒத்துழைப்புக்கள் வழங்கி வருகின்ற உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் அன்பையும் நன்றிகளையும் காணிக்கையாக்குகின்றோம். எமது பிள்ளைகளுக்கு வேண்டிய அத்தனை வசதிவாய்ப்புக்களையும் நாம் இலவசமாகவே வழங்கி வருகின்றோம். பிள்ளைகளுக்கான பௌதீகத் தேவைகளை நிறைவு செய்வதில் நாம் பெருமளவு வெற்றியும் கண்டுள்ளோம்.

விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளிடையேயும் மீத்திறன் கொண்டோர், சராசரித் திறன் கொண்டோர், அதீக தேவையுடையோர் என வெவ்வேறு திறன் மட்டங்கள் காணப்படுகின்றன. இவர்களுள் அதிக தேவை கொண்டோரின் திறன் மட்டங்களை நுணுகி ஆராய்ந்து அவரவர்க்கு ஏற்றவாறான திட்டங்களை வகுப்பதன் மூலம் அவர்களினது கல்வி மட்டத்தை ஓரளவுக்கேனும் மேம்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு எம் முன் உள்ளது. எதிர்வரும் நாட்களில் இது விடயத்தில் அதிக கவனம் செலுத்த நாம் எண்ணியுள்ளோம். இது ஒன்றும் இலகுவான காரியமன்று. எனினும்,ஆண்டவனின் அருளையும் எமது வாழ்வக அன்னையின் ஆசிகளையும் அன்பர்களாகிய உங்களின் ஆதரவையும் துணைக்கொண்டு நாம் இப் பாரிய சவாலையும் நிச்சயமாக வெற்றி கொள்வோம் என உறுதியாக நம்புகின்றோம்.

நன்றி.

**திரு.ஆறுமுகம் ரவீந்திரன்**
தலைவர்,
வாழ்வகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயலாளரின் உள்ளத்திலிருந்து...**



வாழ்வகம் அதன் பெயருக்கு ஏற்றால் போல் வந்தவர்களை மட்டுமன்றி, வரநினைப்பவர்களையும் வாழவைத்துக் கொண்டிருக்கும் புண்ணிய, புனிதப் பூமியாகும். 1988 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு, இன்று முப்பது ஆண்டுகளைக் கடந்து வெற்றிநடைபோடுகின்றதெனில், அதன் ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் தூர நோக்கும் நற்சிந்தனைகளும் விடாமுயற்சியுமே காரணம் எனலாம். அன்னையவர்கள் எம்மைவிட்டுப் பிரிந்து பதின்மூன்றாவது ஆண்டு நினைவுநாளில் வாழ்வக வளாகத்தில் அன்னையவர்கள் உலாவிய அந்த நாட்களையும் இதனைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற வேணவாவும் இன்று அவர்தம் அடியொற்றி வாழ்வகத்தினை விண் தொடவைத்த பெருமை அதன் தற்போதய தலைவரும் அன்னையின் அன்புமாணவருமாகிய திரு. ஆறுமுகம் ரவீந்திரன் அவர்களையே சாரும். அவருக்கு வலதுகரமாக உப தலைவரும் மகாஜனக் கல்லூரியின் ஆசிரியருமாகிய திருமதி. மோகனவதனி ரவீந்திரன் அவர்களும் மற்றும் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பும் வாழ்வகத்தினை வளமாக்கியதெனில் மிகையொன்றுமில்லை.

நிறைவாக வாழ்வக ஆரம்பம் முதல் பல்வேறு வகிபாகங்களில் பணிசெய்யக் கிடைத்த பாக்கியத்தினை வாழ்வின் பெரும் பேறாக எண்ணி "என்னை நன்றாக இறைவன் படைத்ததன் காரணம் இம் மண்ணில் வாழ்வகப் பணி செய்வதற்கே" என்ற சிந்தனையை மனதினில் கொண்டு வாழ்வக அன்னையின் பாதம் பணிந்து வாழ்வகக் கொடி ஓங்கி உயரப் பறக்கவேண்டும் என வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

**வை.க. ரவீகரன் J.P.**
செயலாளர்,
வாழ்வகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாளரின் செய்தி



வாழ்வக நிறுவனமானது உடுவிலில் இயங்கிய காலத்தில் ஒரு பகுதிநேர ஆசிரியராகத் தொண்டு அடிப்படையில் பணியாற்றிய அந்த நாட்கள் மனதில் நிழலாடுகின்றன. அன்று ஆரம்பித்த அந்த உறவு படிப்படியாய் வளர்ந்து இன்று நான் வாழ்வகத்தின் உயர் பதவியான பொருளாளராய்ப் பணியாற்றுமளவுக்கு வலுப் பெற்றுள்ளது.

விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளின் கல்வியைப் பொறுத்த மட்டிலே வாழ்வகம் ஆற்றி வருகின்ற பணிகள் மிக மிகக் காத்திரமானவை. அதேவேளை, இலங்கையிலுள்ள இது போன்ற நிறுவனங்களோடு ஒப்பிடுகின்றபோது எமது நிறுவனமானது அவற்றிலெல்லாமிருந்து வேறுபட்ட தனித்துவமான ஒரு நிறுவனமாய் இயங்கி வருவதையும் இங்கு குறிப்பிடவேண்டும். இத்தனைக்கும் காரணம் எமது வாழ்வக அன்னையின் தீர்க்கதரிசனமான சிந்தனைகளே என்று கூறின் அதில் மிகையேதுமில்லை. இப்பேற்பட்ட ஓர் உயரிய நிறுவனத்தில் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பினையிட்டு உண்மையிலேயே உளப் பூரிப்படைகின்றேன். நமது இலங்கைத் திருநாடு ஈன்றெடுத்த ஒப்பற்ற சேவையாளரான கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையார் பற்றியும் அவரால் உருவாக்கப்பட்ட வாழ்வக நிறுவனம் பற்றியும் பல்கோணங்களில் விரித்துரைக்க விருப்பமிருக்கின்றபோதிலும் விரிவுக்கஞ்சி நிறுத்திக்கொள்கிறேன்.

இந்தப் புதிய ஆண்டிலும் நாம் பல புதிய தடங்களைப் பதிப்போம் என்று கூறி, அன்னை அன்னலட்சுமி அவர்களின் பாதம் பணிந்து நிறைவுசெய்கிறேன்.

**திரு.தம்பிஐயா வாமதேவன்**
பொருளாளர்,
வாழ்வகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பேருரையாளர் அறிமுகம்



வாழ்வக ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் பதின்மூன்றாவது நினைவு நாள் நிகழ்விலே நினைவுப் பேருரையாற்ற முன்வந்துள்ள எந்திரி. சர்வானந்தன் சர்வராஜா அவர்கள் ஓர் சிறந்த கல்விமானாவார். ஒப்பற்ற பல கல்விமான்களை ஈன்றெடுத்த மல்லாகம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/கோட்டைக்காடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் மேற்கொண்டார். இடைநிலைக் கல்வியை யா/மல்லாகம் மகா வித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை யா/வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திலும் மேற்கொண்ட இவர் 2000ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அதிவிசேட சித்திபெற்று மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்.

2005ஆம் ஆண்டு மொறட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து பொறியியல் இளமாணிப் பட்டதாரியாக வெளியேறிய இவர் 2007ஆம் ஆண்டு ஐக்கிய இராஜ்ஜியத்திலுள்ள சறே பல்கலைக்கழகத்தில் (University of Surrey) பொறியியல் முதுமாணிப் பட்டதாரியாக வெளியேறிய இவர் அந்நாட்டிலேயே 2010ஆம் ஆண்டு வரை பணியாற்றி, பின்னர் தனது தாய்நாட்டு மக்களுக்கு சேவையாற்ற யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

2010ஆம் ஆண்டிலிருந்து 2012ஆம் ஆண்டு வரை வடமாகாண துரித அபிவிருத்தி திட்டத்தில் பணியாற்றிய இவர் 2012ஆம் ஆண்டு வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளராக இணைந்து கொண்டு பின்னர் 2015ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

இவர் தனது பாடசாலை மற்றும் பல்கலைக்கழக நாட்களில் இலக்கியம், கவிதை மற்றும் ஆன்மீகம் தொடர்பான ஈடுபாடுடையவராகவும், மேடை நாடகங்கள், விவாத மேடைகள், சொற்பொழிவுகள் போன்றவற்றிலும் ஈடுபட்டு தனது பேச்சுத் திறமையை வெளிக்கொண்டுவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளராகக் கடமையாற்றும் இவர் நிலத்தடிநீர் சேமிப்பு தொடர்பாக பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதோடு தனது ஆன்மீகப் பணியில் தொடர்ந்தும் ஈடுபாடுடையவராக ஆலயங்களில் சொற்பொழிவுகளை செய்து வருகிறார்.

2016ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய வெளிவிவகார மற்றும் வர்த்தக திணைக்களத்தின் உதவியுடன் சர்வதேசநீர் மையத்தினால் நடாத்தப்பட்ட "ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தின் ஊடாக நிலைத்து நிற்கும் நிலத்தடிநீர் முகாமைத்துவம்"எனும் கற்கை நெறியில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்து கொண்டார்.

2018இல் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்டத்திற்கான ஐந்து வருட அபிவிருத்தி திட்டத்தில் (2018-2022) யாழ்ப்பாண மாவட்டத்திற்கான நீர்வளங்கள் சம்பந்தமாக கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார். மேலும் இவ்வருடத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச நீர்வளங்கள் மாநாட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தின் நீர்வளங்கள் சம்பந்தமாக கருத்துரையாற்றினார்.

இத்தகு உயர் தகமைகளும் திறமைகளும் ஒப்பற்ற மனிதநேயமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற எந்திரி.சர்வானந்தன் சர்வராஜா அவர்கள் எமது நினைவுப் பேருரையாளராக வாய்க்கப் பெற்றிருப்பதையிட்டு மட்டில்லாமகிழ்வும் பெருமிதமும் அடைகின்றோம்

அவரின் எதிர்காலம் மேன்மேலும் சிறக்கஎமது இதயம் நிறைந்தவாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர் பற்றிய அறிமுகம்

நீரின்றி அமையாது இவ்வுலகு (When Water Fails, Function of Nature Cease) நீர் என்ற ஒன்று பொய்த்துப் போகுமானால் இந்த இயற்கையின் அத்தனை அசைவுகளும் நின்றுவிடும், உறைந்துவிடும் என்பதை 3000 ஆண்டுகளுக்கு முன்னே எங்கள் ஐயன் வள்ளுவன் எடுத்தியம்பி விட்டு சென்றிருக்கிறான். நீர் என்பது மிகவும் முக்கியம் வாய்ந்தது என்பதையும் அது பற்றிய விழிப்புணர்வு எம்மிடம் என்றும் இருக்கவேண்டுமென்று என்றோ எமக்கெல்லாம் விதைக்கப்பட்டிருக்கிறது.

நீர் என்பது இன்றைய உலகின் பேசுபொருளாக மாற்றம் அடைந்திருக்கிறது. பல அவைகளில் விவாதப்பொருளாக எழுந்து நிற்கிறது. பல இடங்களில் சர்ச்சைப் பொருளாக சூழ்ந்திருக்கிறது. ஏன் நாளை இந்த உலகின் சண்டைக்குரிய பொருளாகக் கூட வடிவம் எடுக்கும்

### "தங்கம் கொடுத்து தண்ணீர் வாங்குவாய்"

நாளை தண்ணீரின் பெறுமதி தங்கத்தைவிட வலுப் பெறுமென்று ஆருடங்களும் ஆராய்ச்சிகளும் அங்கங்கே எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றன. 2001ம் ஆண்டு கொழும்பு சென்றபோது அங்கே தண்ணீர்ப்போத்தலையும் அதில் விலை பொறிக்கப்பட்டிருப்பதையும் பார்த்து மிகவும் வியப்படைந்தேன். தண்ணீருக்கு காசா என்று ஆனால் இன்று எல்லா வீடுகளும் தண்ணீரப் போத்தல்கள் படையெடுத்து முகாம் அமைத்து நிற்கின்றது.

### "நீருக்காகவே நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை வரும்"

நாம் நிவாரணத்திற்க்காக நீண்ட வரிசையில் காத்திருந்த வரலாறு, பாணுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்த வரலாறு இப்படி பல விடயங்களுக்கு காத்திருந்த வாழ்வியலை கடந்து வந்திருக்கிறோம். ஏன் இன்றும் இந்த உலகில் புதிதாக I phone /Samsung phone வெளிவரும் போதும் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது .ஆனால் நாளை நீருக்காக இந்த உலகமே நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

ஆளில்லாத வீட்டுக்குள் அரைக்குவளை நீர் திருடினான் என்பதற்காக ஆயுள்தண்டனை கூட விதிக்கப்படும் சட்டங்கள் உருவாக்கப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மூன்றாம் உலகப் போருக்கான முக்கிய காரணிகளில் முதல் காரணி நீர்"**

மூன்றாம் உலகப்போர் மூளுமாகயிருந்தால் அதற்கான முக்கியமான முதன்மைக் காரணம் நீராகத்தான் இருக்குமென்று இன்றைய அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் உலக அரசியல் ஆய்வாளர்களும் கூறுகின்றார்கள். மழை பெய்யும் தானே எமக்கு நீர் கிடைக்கும்தானே என்று எதிர்பார்த்து காத்திருந்தால் வல்லரசுகள் உங்கள் மழை மேகங்களை எல்லாம் கைப்பற்றிச் சென்றுவிடும்.

இன்றைய காலத்திலேயே குடிப்பதற்கு சற்றும் உகந்ததல்லாத நீரைப் பருகும் பல சமூகங்கள் உண்டு. இந்தநிலை நாளை நமக்கும் வரலாம் என்பதே எம்முன்னே எழுந்துநிற்கும் மிகப்பெரிய அச்சம். நீருக்கான யுத்தம் நீண்ட தூரத்தில் இல்லை

இந்தப் பூமி 67% இற்கு மேலாக நீரினால் சூழப்பட்டிருக்கிறது, இருந்தபோதிலும் 2.7% இற்கு குறைவாகவே நன்னீர் காணப்படுகின்றது. அதிலும் 2.05% இற்கு மேலான நீர் பனிக்கட்டியாகவும் பனிப் பாறைகளுக்குள் உறைந்தும் காணப்படுகின்றது. மனிதன் பெறக் கூடியதாக அடையக்கூடியதாக இருக்கின்ற நன்னீர் 0.7% இற்கும் குறைவாகவே இருக்கின்றது என்பதே கசப்பான உண்மை. நீர் இருக்கிறது ஆனால் தேவைக்கேற்ற வகையில் இல்லை என்பதே யதார்த்தம்.

உலகளாவிய ரீதியில் உற்றுநோக்குமிடத்தில், நீரானது பெருகி வருகின்ற மிகப் பற்றாக்குறையான ஒரு வளமாகும். அதிகரித்து வரும் சனத்தொகை, காலநிலை மற்றும் உணவுநுகர்வு முறையில் ஏற்பட்ட மாற்றம் இதில் கணிசமான செல்வாக்கை செலுத்துகின்றது. மதிப்பிடப்பட்ட தற்போதுள்ள தரவுகளிலிருந்து பார்க்கும்போது சில நாடுகள் வரும் 20 ஆண்டுகளில் நீர் தொடர்பில் கடுமையான பற்றாக்குறையை அனுபவிக்கும். அதிலும் சீனா, இந்தியா, தென் ஆபிரிக்கா மற்றும் மத்தியகிழக்கு நாடுகள் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளாக இருக்கும்.

உலகளாவிய ரீதியில் 70%மான நீர் விவசாயத் தேவைக்கும் 22%மான நீர் தொழிற்துறைப் பயன்பாட்டுக்கும் 8%மான நீர் வீட்டுத்தேவைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் வளர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்த நாடுகளில் 30%மான நீர் விவசாயத் தேவைக்கும் 59%மான நீர் தொழிற்துறைப் பயன்பாட்டுக்கும் 11%மான நீர் வீட்டுத்தேவைக்கும் பயன்படுத்தப்படுகின்றது. எங்களைப் போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 82%மான நீர் விவசாயத்தேவைக்கும் 10%மான நீர் தொழிற்துறைப் பயன்பாட்டுக்கும் 8%மான நீர் வீட்டுத் தேவைக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

நீரின் பரவலாக்கம் என்பது சனத்தொகைக்கு ஏற்றது போல் இல்லாமல் சீரற்ற நிலையில் காணப்படுகிறது. உதாரணமாக ஆசியாவில் உலக சனத்தொகையில் 60%இற்கும் அதிகமான மக்கள் வாழ்கின்றனர். ஆனால் நீர் 36%இற்கும் குறைவாகவே காணப்படுகிறது. தென்அமெரிக்காவில் உலக சனத்தொகையில் 6%இற்கும் குறைவான மக்கள் வாழ்கின்றனர். ஆனால் நீர் 26%இற்கும் அதிகமாகக் காணப்படுகிறது. இவ்வாறு இடத்துக்கு இடம் பிரதேசத்திற்குப் பிரதேசம் நீரின் பரம்பல் சீரற்று காணப்படுகின்றது. அத்தோடு1 2%மான மக்கள் 85%மான நீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மீதி 88%மான மக்கள் 15%மான நீரையே பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இதுவே நீர் தொடர்பான யுத்தத்திற்கு வழிவகுத்துக் கொண்டிருக்கின்றது.

## யாழ்ப்பாணத்தின் நீர்வளங்கள்

இலங்கையில் 9 மாகாணங்கள் உண்டு. இதில் வட மாகாணத்தில் ஏறக்குறைய ஒருமில்லியன் சனத்தொகை காணப்படுகிறது. வட மாகாணத்தில் 5 மாவட்டங்கள் உள்ளன. வட மாகாணத்தில் உள்ள மொத்தச் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்ட சனத்தொகை யாழ்ப்பாணத்தில் உள்ளது. ஆனால் நிலப்பரப்பை ஒப்பீடு செய்தால் ஏனைய மாவட்டங்களை விட குறைவாகவே உள்ளது.

இலங்கையில் 103 ஆறுகள் காணப்படுகிறன. வட மாகாணத்தில் 23 ஆறுகள் காணப்படுகிறன. வட மாகாணத்தில் உள்ள ஆறுகள் Seasonal River ஆகவே காணப்படுகிறது. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை காலங்களில் ஓடுகின்ற ஆறுகளாகவே காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் ஆறுகள் இல்லை என்பது துரதிஷ்டவசமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆறுகள் இல்லை. ஆனால் வழுக்கை ஆறு என்ற ஒன்று உண்டு. இது ஓர் ஆறு இல்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள வழுக்கை ஆறு தொடர்பாக செங்கை ஆழியான் தனது நூலில் "யாழ்மாதா தன்னை யாரும் மலடி என்று சொல்லக்கூடாது என்பதற்காக சத்திரசிகிச்சை செய்து பெற்றுக்கொண்ட பிள்ளை வழுக்கை ஆறு"என்றார்.

**"நீறில்லா நெற்றி பாழ்**
**நெய் இல்லா உண்டி பாழ்**
**ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்"**

என்று ஔவையார் கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தினை அழகுபடுத்த யாழ்ப்பாணத்தில் ஓர் ஆறினை உருவாக்குவதற்காக நீண்டகாலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திற்கான ஆறு ஆறுமுகம் திட்டம் என்று அழைக்கப்படும் திட்டம் யாவரும் அறிந்ததே.

ஆனையிறவு கடல்நீரேரியில் 04 ஆறுகள் கலக்கிறது. அதனை முள்ளியான வாய்க்கால் ஊடாக வடமராட்சி நீரேரி மற்றும் உப்பாறு நீரேரிகளுக்கு நீரை கொண்டு வருவதே இத்திட்டமாகும்.

யாழ்ப்பாணத்தின் சிறப்பை உருத்திரமூர்த்தி பின்வருமாறு கூறுகின்றார்,

"ஆறு பிறந்து தவழ்ந்து வயல்கள் அடைந்து கதிர்கள் விளைந்திட வானேறி உயர்ந்த மலை இல்லை என்று கதைகள் கூறுவதுண்டு. வானேறி உயர்ந்த மலை இல்லையாயினும் என்ன இருந்தன தோள்கள் என்று கூறி உழைத்து பின் ஆறி கலைகளில் ஊறி சிறந்தது யாழ்ப்பாணம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நிலைத்தடி நீர்வளம் - ( Ground Water)

ஆறுகள் இல்லை என்பதனால் மிகப்பெரிய குளங்கள் அமைத்து பரிபாலிக்கும் நிலை எமக்கு இல்லை. " கடவுள் ஒரு வாசல் மூடினாலும் மறுவாசல் திறந்து வைப்பான்" என்பதற்கிணங்க எமக்கு " நிலத்திற்கடியில் நீரை தேக்கும் நீர்த்தேக்கத்தை" தந்திருக்கிறான்.

இன்னொரு வகையில் கூறுவதாயின்,இன்றைக்குத்தான் நீர் என்பது புதையல், பொக்கிசம் என கூறுகிறார்கள். ஏற்கனவே இதனை நாம் அறிந்திருந்த படியால் தான் நிலத்தடியில் நீரை புதைத்து வைத்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் 4 நிலத்தடி நீர்த்தேக்கங்கள் (Aquifers) உள்ளன

1. வலிகாமம் – Valikamam Aquifer
2. வடமராட்சி – Vadamaradchi Aquifer
3. தென்மராட்சி – Thenmaradchi Aquifer
4. ஊர்காவற்றுறை – Kayts Aquifer





சுண்ணாம்பு கற்பாறைகளுக்கு இடையில் உள்ள இடை வெளிகள் வெடிப்புகள் என்பவற்றில் நீர் தேங்கி காணப்படுகிறது. மழைகாலத்தில் மழைநீர் நிலத்திற்கு ஊடாக சென்று இங்கே தேக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்வட்டமும் குடாநாட்டின் தரைகீழ் நீரின் அமைப்பும்




## மேற்பரப்பு நீர்வளம் (surface water)

பெரிய குளங்கள் இல்லாவிட்டாலும் மேற்பரப்பில் நீர் தேக்கி வைத்திருக்கும் அமைப்புகள் உண்டு. யாழ்ப்பாணத்தில் மூன்று நீரேரிகள் காணப்படுகிறது. அவையாவன:

1. உப்பாறு நீரேரி – Upparu Lagoon
2. வடமராட்சி நீரேரி – Vadamaradchi Lagoon
3. ஆனையிறவு நீரேரி – Elephant Pass Lagoon


உப்பாறு நீரேரி ஆனது நாவற்குழிப் பாலத்திற்கு அருகில் தடுப்பணை (Barrage) அமைத்து கடல்நீரை உள்வராது தடுத்து நன்னீரை சேமிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்றே தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மேற்கு புறத்தில் பராஜ் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ஆனையிறவில் 1960 களில் முயற்சி எடுத்த போதும் தற்போது எவ்வித செயற்பாடும் இன்றி காணப்படுகிறது.

அதனை விட 1000க்கும் மேற்பட்ட சிறுகுளங்கள் காணப் படுகிறன. வழுக்கையாறு எனும் வெள்ள வாய்க்கால் தீவகங்கள் மற்றும் கரையோரங்களை அடிப்படையாகக் கொண்டு உவர்நீர் உள்வருவதை தடுத்து நன்னீரை வைத்திருக்கும் 34 உவர்நீர் தடுப்பணை அமைப்புக்கள் காணப்படுகிறன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை நன்னீரை மேற்பரப்பில் வைத்திருக்கும் அமைப்புக்கள் ஆகும். அதன் மூலம் நீர் மீள்நிரப்புகை மற்றும் நிலத்தடி நீர் மேம்படுத்தல் என்பன நடைபெறுகிறது.




யாழ்ப்பாணத்தில் பெறக்கூடிய நீரின் அளவும் யாழ்ப்பாணத்திற்குத் தேவையான நீரின் அளவும் (water availability & Water Requirement)

யாழ்மாவட்டத்திற்கு சராசரியாக 1250 மில்லிமீற்றர் (mm) மழைவீழ்ச்சி கிடைக்கிறது. யாழ்ப்பாணத்தின் பரப்பளவு கிட்டத்தட்ட 1000 சதுர கிலோமீற்றர் (Sqr Km)எனவே 1250 மில்லியன் கன மீற்றர் (MCM) நீர் கிடைக்கிறது. 1250MCM நீர்மழை மூலம் ஒவ்வொரு வருடமும் கிடைக்கிறது. இதில் 375MCM நீர் (30%) கடலிற்கு செல்கிறது. 625MCM (50%) நீர் வெப்பத்தினால் ஆவியாகிறது. மீதியான 250MCM(20%) நீர் நிலத்திற்கு சென்று நிலத்தடி நீராக சேமிக்கப்படுகின்றது. 150MCM நீர் விவசாய தேவைக்கு எடுக்கப்படுகிறது. மீதியே (100MCM) நீர் பெறக்கூடியதாக இருக்கிறது. எமது குடிநீருக்கான தேவை 23MCM ஆகும். எமது தேவையை விட அதிகமாக நீர் இருக்கிறது என்பது எமக்கு ஒரு ஆறுதல் தரக்கூடிய விடயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட எமது மேற்பரப்பு நீர்வளமாகிய நீரேரிகள் குளங்கள் உவர்நீர்த்தடுப்பணையிலும் மிகக் கணிசமான நீர் (150 MCM இற்குமேல்) சேமிக்கப்படுகிறது. ஆனால் அவையில் பெரும்பகுதி ஆவியாதல் மூலம் இழக்கப்படுகிறது. அத்தோடு மழைகாலங்களில் இந்த நீர்நிலைகளுக்கூடாக கணிசமான அளவு நீர் கடலைச் சென்றடைகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எம்முன்னோர்கள் கையாண்ட நீர்முகாமைத்துவம்

நாம் எமது அனைத்து நீர்த் தேவைகளுக்கும் நிலத்தடி நீரையே நம்பியிருக்கின்றோம். இதனை நன்கு புரிந்துகொண்ட எமது மூதாதையர்கள் அதனை மிகச்சரியான முறையில் முகாமைத்துவம் செய்திருக்கிறார்கள். நீரை நிலத்தடியில் சேமித்தல்(Recharging) நிலத்தடிநீரை உச்சபயனுள்ளதாக பயன்படுத்தல் (Dischrging) மற்றும் மாசடையாது பார்த்துக்கொள்ளல் (pollution control). ஆயிரத்திற்கு மேற்பட்ட குளங்கள் உட்பட நீர்நிலைகளை உருவாக்கினார்கள் .மழைக்காலங்களில் வீட்டைச் சுற்றி வரம்பு கட்டியும் வெறும் காணிகள் நிலங்களை உழுதுவிட்டும் நிலத்தடியில் நீர் சேமிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். வீட்டில் அல்லது தமது காணியில் கிடைக்கின்ற மேலதிக மழைநீர் குளத்தைச் சென்றடைவதற்கு ஏற்றதுபோல் வெளிகளே தங்கள் காணிகளைச் சுற்றி ஏற்படுத்தியிருந்தார் .நீரை தமது தேவைக்குப் பயன்படுத்தும் போதும் பெரியகிணறு அமைத்து அதில் நீர் ஊறிவர ஊறிவர விட்டே இறைத்தார்கள் அத்துடன் தமது விவசாயத்திற்கு அதிகாலையில் சென்றே இறைத்தார்கள். சூரியன் வரும் முன்னே அந்த தாவரம் நீரை பயன்படுத்துகின்ற ஏற்ப்பாட்டை செய்தார்கள்.

அத்தோடு விவசாயத்தில் ஆட்டெரு, மாட்டெரு, கூட்டெரு என்பவற்றையே உரமாக பயன்படுத்தி நிலத்தடிநீர் மாசடையாமல் பார்த்துக்கொண்டார்கள். தமது வாழ்வியலையே நல்லதொரு நீர் முகாமைத்துவமாகக் கொண்டிந்தார்கள். குளம் அமைத்து அதனைச் சுற்றி மரங்கள் நட்டார்கள் அவைகள் நீர் ஆவியாகுவதை தடுப்பனவாகவும் நீரை சுத்திகரித்து நிலத்தடியில் சேமிக்க உதவிபுரிவனவாகவும் இருந்தன. கடவுள்மேல் கொண்ட பக்தி பயம் காரணமாக நீரை யாரும் மாசுபடுத்தமாட்டார்கள் என்பதால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்துக்கும் அடியில் பிள்ளையாரையோ, முருகனையோ, அம்மனையோ ஏதாவது ஒரு தெய்வத்தை பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தார்கள். கோயிலுக்கு அருகில் கிணறு அமைத்து அதிலேயே தமது குடிநீர்த் தேவைக்குரிய நீரைப் பெற்று வந்தார்கள். அத்தோடு பெரும்பாலான கோயில் திருவிழாக்கள் ஆனிமாதம், ஆடிமாதம், ஆவணிமாதம் நடைபெறும் கடைசிநாள் திருவிழாவை தீர்த்தம் என்று சொல்வார்கள். இதன் உண்மையான பொருள் தூர்வாருதல் அதாவது குளத்திற்குள் இருக்கும் சேர்சகதிகள் எல்லாம் வெளியில் எடுத்து புரட்டாதி, ஐப்பசி மாதங்களில் மழை பெய்யும் போது அந்நீரை சேமித்து வைப்பதற்கும் நிலத்தடைக்கு இலகுவில் ஊடுருவுவதற்குரியற்பதே ஆகும். கோயில்களை விட கோயிற் குளங்கள் முக்கியமானவை என்பதை நன்கு உணர்ந்து செயற்பட்டார்கள்.

## தற்போதய நீர் முகாமைத்துவம்

தற்போதய நீர் முகாமைத்துவமானது நீரைப் பாதுகாப்பதில் அக்கறையற்ற தன்மையையே காட்டிநிற்கின்றது.

1. பண்டைய காலங்களில் நம் முன்னோர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்ட நீர் நிலைகள், குளங்கள் மற்றும் கிணறுகள் என்பன இயற்கையின் தாக்கத்தினால் தூர்ந்து போயும் இன்றைய நவீன முன்னேற்றத்தினால் குளங்கள், கிணறுகள் மற்றும் நீர் நிலைகள் என்பன மூடப்பட்டு கட்டடங்களாகவும் வயல்களாகவும் விவசாயநிலங்களாகவும், பண்ணைகளாகவும் மாற்றப்பட்டுள்ளதினால் நிலத்தடிநீர் சேமிப்பானது பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்னைய காலங்களில் குளங்கள் அமைக்கப்பட்டு அத்துடன் குளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக குளங்களின் அருகே தெய்வத்தினையும் இருத்திவைத்தார்கள். காலப் போக்கில் கோயில்களின் விஸ்த்தீரணம் காரணமாக மண்டபங்கள், மடங்கள், கல்யாணமண்டபங்கள், அரங்கங்கள் என நவீன தேவைகள் ஏற்பட்டதன் காரணமாக கோயில்களுக்கு அருகிலிருந்த குளங்கள், நீர் நிலைகள் என்பன மூடப்பட்டு அவை தெரியாமலே போய்விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நம் முன்னோர்களின் குடியிருப்பானது பல ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்ட மழைநீரை சேமிக்கக் கூடிய வரம்புகள் அமைத்து நீரைச் சேமித்து நிலத்திற்கடியிலும் வாய்க்கால்கள் மூலம் மேலதிக நீரை குளங்களிலும் சேமித்து வைத்தார்கள். ஆனால் தற்பொழுது அவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என குடும்பங்கள் விரிவடைந்து செல்வதனால் அவர்களுக்கான குடியிருப்பானது பாரிய அளவிலிருந்த காணிகள் சிறுசிறு துண்டுகளாக குறுகி வேலிகள் எல்லாம் தற்பொழுது சுவர்களினால் கட்டப்பட்டுமதிலில் துளையிட்டு மழைநீர் தேங்கி நிற்காது பலதிசைகளிலும் சென்று வீணாகி விடுகின்றது. மேலும் வீதிகள் யாவும் தற்பொழுது காபெற் இடப்பட்டு அகலமாக்கப்பட்டும் உயர்த்தப்பட்டும் உள்ளதினால் மழைநீர் வழிந்தோடி, குளங்களிலும் சேர்த்து வைக்கப்படுவது தடைப்படுகிறது.

3. முன்னையகாலங்களில் நம் முன்னோர்களின் விவசாய நடவடிக்கையானது சூரியன் உதிக்கு முன்னரே பயிர்களுக்கு நீர் பாய்ச்சினார்கள். இதனால் பயிர்களுக்கு பாய்ச்சப்படும் நீரானது முழுமையாக பயிர்களைச் சென்றடைந்தது. அத்துடன் பயிர்களுக்கு பாய்ச்சப்படும் நீரானது துலாமிதித்தும் பட்டைகளாலும் வீண் விரயமில்லாது பாதுகாப்பாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தி விவசாயமும் நீரும் பாதுகாக்கப் பட்டது. ஆனால் தற்பொழுது அதிகாலையில் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதைத் தவிர்த்து நினைத்த நேரத்திலும் நீர் பாய்ச்சுகின்றார்கள். இதனால் சூரியவெப்பத்தின் காரணமாக பாய்ச்சப்படும் நீரானது முழுமையாக பயிர்களைச் சென்றடையாது ஆவியாகிவிடுகின்றது. மேலும் நவீன முறை மூலம் மின்சார இயந்திரங்கள் (Water pump) போன்ற சாதனங்களினால் நீர் பாய்ச்சும் முறை கையாளப்படுவதனால் நீரைப் பெறுகின்ற கஷ்ட நிலைதெரியாது கட்டுப்பாடின்றி நீர் விரயமாக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நம் முன்னோர்கள் அன்றையகாலங்களில் பயிர்களுக்கு இயற்கைப் பசளையையே பயன்படுத்தினார்கள். இதனால் மண்வளம் பாதுகாக்கப்பட்டு மழைகாலங்களில் தேவையான நீரை நிலத்திற்கடியில் சேமித்து வைக்கக்கூடியதாக இருந்தது. பயிர்களும் செழிப்பாக வளர்ந்து நச்சுத்தன்மையற்ற அதன் விளைச்சலைத் தந்தது. மக்களும் நோயற்றவர்களாகவும் எந்நேரமும் சுறுசுறுப்புள்ளவர்களாகவும் சுகதேகிகளாகவும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும் காணப்பட்டார்கள். தற்போதய செயற்கை இரசாயன பசளையின் பாவனை காரணமாக மண்வளமும் பாதிக்கப்பட்டு முக்கியமாகசெயற்கை இரசாயனப் பசளை காரணமாக அது மண்ணிற்கு அடியில் சென்று நன்னீருடன் கலந்து நச்சுத் தன்மையை ஏற்படுத்தி நீர்வளத்தையே பாதிப்பிற்குள்ளாக்கி விடுகின்றது.

## நீர் தொடர்பாக தற்போது நிலவுகின்ற பிரச்சனைகளும் சவால்களும்

நிலத்தடிநீர் தொடர்பாக தரம் தொடர்பான பாதிப்பும் அளவு தொடர்பான பாதிப்பும் தற்போது எதிர்கொள்கின்றனர்.

**தரம் தொடர்பானபாதிப்புக்கள்**

**1. கடல் நீர் உட்புகுதல்:**

நாட்டின் ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாகவும் போதியளவு நிதி ஏற்பாடு இன்மை காரணமாகவும் உவர் தடுப்பணைகள் சரிவர பராமரிக்க முடியவில்லை. இதன் காரணமாக கடல் நீர் அதிகளவு உட்புகுந்து உவர்நீர் ஆக்கப்படுகின்றது.

**2. ஆழ்துளைக் கிணறுகள் அதிகளவில் அமைக்கப்படல்:**

அதிகளவு தேவையின் பொருட்டு அதிக ஆழங்களுக்கு கிணறுகளை அமைத்து நிலத்தடிநீரை அதிகமாக அகத்துறுஞ்சப்படுவதனால் உவர் நீர் ஆக்கப்படுகின்றது..

**3. இரசாயனங்களினால் மாசுபடுதல்:**

விவசாய நடவடிக்கையின் பொருட்டு அதிகமான செயற்கை இரசாயனஉரங்கள் மற்றும் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதனால் நிலத்தடிநீர் மாசுபடுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. விவசாயக் கிணறுகள் சேதமடைந்தும் பாதிப்படைந்தும் நிலமட்டத்துடன் இருப்பதனால் மழைத்தண்ணீர் நேரடியாக கிணறுகளில் உட்புகுந்து செல்லும் நிலமை காணப்படுவதுடன் இதன் மூலம் அபாயகரமானபாதிப்புஏற்படுகின்றது.

**5. மலக்கழிவுகளினால் பாதிப்படைதல்:**

நகர்ப்பகுதிகளில் சனத்தொகை அதிகரிப்பு மற்றும் முறையற்ற கழிவகற்றல் முகாமைத்துவத்தினால் நேரடியாக நிலத்தினுள் உட்புகுந்து நீர் மாசடைகிறது.

**6. எண்ணெய்க் கழிவுகளினால் மாசுபடுதல்:**

வாகனசுத்திகரிப்பு நிலையங்களில் முறையான கழிவுநீர் முகாமைத்துவம் இல்லாதமையினாலும் நிலத்தடிநீரினுள் உட்புகுந்துநீர் மாசடைகின்றது.

**அளவு தொடர்பான பாதிப்புக்கள்**

**1. நீருக்கானதேவை அதிகரித்தல்:**

சனத்தொகைப் பெருக்கம் காரணமாகவும் வாழ்வியலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் பிரதேச அபிவிருத்தியாலும் நீருக்கான தேவை அதிகரித்துள்ளது.

**2. நிலத்துக்குள் ஊடுருவும் நீரின் அளவு குறைவடைதல்:**

நகரமயமாக்கல் மற்றும் நீர் நிலைகளை சரியாக பராமரிக்காத காரணத்தினாலும் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதனால் வீடுகள், சுற்றுப்புறச் சூழல் கொங்கிறீற்றால் தரை போடப்படுவதுடன் வீதிகள் காப்பெற்றினால் போடப்பட்டிருத்தல் நிலத்திற்குள் நீர் ஊடுருவி நிலத்தடியில் சேமிக்கப்படுவது குறைவடைந்துள்ளது

**3. அதிகமான நீரை எடுத்தலும் வீணாக்குதலும்:**

விவசாயத் தேவையின் நிமித்தம் கூடுதலான நீர் எடுக்கப்பட்டு சரியானமுறையில் முகாமைத்துவம் செய்யப்படாமல் பயன்படுத்துவதால் பெருமளவு நீர் விரயமாக்கப்படுகின்றது. அதேபோல் வீடுகளிலும் விடுதிகளிலும் கணிசமான நீர் விரயமாக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **மணல் அகழ்வு மற்றும் சுண்ணாம்புக்கல் பாறை அகழ்வு:**

நிலத்தடி நீரில் மண் கும்பி மற்றும் சுண்ணாம்புக்கல் பாறையின் செல்வாக்கு மிகவும் பிரதானமானது. சட்டரீதியாகவும் சரி சட்டத்திற்கு அல்லாத மணல் அகழ்வு மற்றும் சுண்ணாம்புக்கல் பாறைஅகழ்வினால் நிலத்தடிநீரில் அதிகளவு பாதிப்பு ஏற்படுகின்றது.

## நீர் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள்

1. கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கு ஏற்ற உவர்நீர்த் தடுப்பணைகளைப் புனரமைப்பதோடு, நீரேரித்திட்டங்களை புனரமைத்து அவற்றை திருப்திகரமான முறையில் பராமரித்து ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

2. ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தலைக் கட்டுப்படுத்தல்.

3. விவசாயத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன பொருட்களைக் கட்டுப்படுத்தி, இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நிலத்தடிநீர் மாசுதொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவூட்டி விழிப்புணர்வை ஏற்படுத்தல். நிலத்தடிநீர் மாசுபடுதலைக்கட்டுப்படுத்தும் சேதன விவசாயத்தினை ஊக்குவித்தல்.

4. விவசாயக் கிணறுகளை தகுந்த முறையில் புனரமைப்புச் செய்து, அவற்றை விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.

5. சனநெருக்கடி மிகுந்த நகரங்களில் மலக்கழிவுகள் நிலத்தடி நீருக்குள் கலக்காதபடி சரியான கழிவகற்றல் முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்தல்.

6. தொழிற்சாலைகள் மற்றும் வாகன சுத்திகரிப்பு நிலையங்களில் வெளியேற்றப்படும் கழிவுநீரை சூழல்சட்டங்கள் மற்றும் கழிவகற்றும் திட்டங்களை சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பிரதேச சபைகள் ஊடாக நடைமுறைப்படுத்தல். மேலும் கழிவுநீரை மீள்சுழற்சி செய்வதன் மூலமும் நீர் வெளியேற்றலைக் கட்டுப்படுத்த முடியும். வாகனசுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் வெளிவரும் கழிவுநீரை மீளப் பயன் படுத்துவதற்கு ஏற்றதாக சுத்திகரிப்பு செய்வதற்கான நடைமுறை களை பின்பற்றல்.

7. குளங்கள் மற்றும் நீர்நிலைகளை புனரமைப்புச் செய்வதன் மூலம் மழைநீரைஅதிகளவில் சேமிக்கநடவடிக்கைகளை எடுத்தல். வீடுகள்,பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் மழைநீரைச் சேமிப்பதற்கு புதிய உத்திகளைக் கையாளுதல். மழைநீர் தொட்டிகளை அமைத்து மழைநீரைச் சேமித்து அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

8. நீர் விரயமாகுதலைக் கட்டுப்படுத்தல். விவசாயத்தில் நீரைச் சிக்கனமாக பயன்படுத்தும் முறைகளான தூவல் நீர்ப்பாசனம் மற்றும் சொட்டுநீர்ப்பாசனம் போன்றவற்றை அறிமுகப்படுத்தல். மேலும் விடுதிகளில் நீரைச் சிக்கனமாக பயன்படுத்தும் நீர் வழங்கும் உபகரணங்களைப் பயன்படுத்தல்.

9. வளங்களைப் பாதுகாத்தல். மணல் மற்றும் சுன்னாம்புக் கற்கள் போன்ற நிலத்தடி நீரில் செல்வாக்குச் செலுத்தும் வளங்களைப் பாதுகாத்து,மணல் மேடுகள் காணப்படும் இடங்களில் அபிவிருத்தி மற்றும் விவசாயபணிகளைக் கட்டுப்படுத்தல்.

10. நீரைப் பாதுகாப்பது தொடர்பான சட்டங்களை உருவாக்குதல்.

## யாழ்ப்பாண நீர்ப்பிரச்சனைக்கான உபாயமான மிகப்பெரும் திட்டங்கள்

யாழ்ப்பாண குடிநீர்த்தேவைக்கு இரணைமடுவில் இருந்து நீரை கொண்டுவருதல் என்ற முனைப்புடன் திட்டங்கள் தொடங்கப்பட்டிருந்தபோதிலும் அங்கே உள்ள நீர் அங்குள்ள விவசாயத்தேவைக்கே போதுமானதாக இல்லாததால் கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயிகள் யாழ்ப்பாணத்திற்கு நீர்வழங்குவதை விரும்பவில்லை. இதன் விளைவாக நீரைபெறுவதற்கான பல தேடல்கள் தொடங்கின அதன் பெறுபேறுகளாக பின்வரும் திட்டங்கள் முன்மொழியபட்டுள்ளன.

### 1. வடமராச்சி நீரேரித்திட்டம்

வடமராட்சி நீரேரியில் கிடைக்கின்ற நீரின் ஒரு பகுதியை உப்பாறு நீரேரியில் அந்தணதிடல் எனும் பகுதியில் 6 சதுரகிலோமீற்றர் பரப்பளவில் 25 அடி உயரத்திற்கு அணைக்கட்டு அமைத்து அதற்குள் நீரைச் சேமித்து மாதாந்தம் 1.5 MCM நீரை குடிநீருக்கு வழங்குவதே இத்திட்டமாகும். பேராசிரியர் குகனேஸ்வரராஜா அவர்களின் சிந்தனையிலும் அவரது ஆய்விலும் கண்டறியப்பட்ட திட்டம் இதுவாகும்.

### 2. யாழ்ப்பாணத்திற்கான ஆறு / மேம்படுத்தப்பட்ட ஆறுமுகம் திட்டம்

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியிலாயராக இருந்த ஆறுமுகம் என்பவரால் முன்மொழியப்பட்டு 1950 களில் நடைமுறைப்படுத்தப்பட்டு இடையில் கைவிடப்பட்ட திட்டம். தற்போது நெதர்லாந்து நாட்டின் நீர் தொடர்பான நிபுணர்களால் தற்போதைய காலக்கட்டத்திற்கு ஏற்ப சாத்தியப்பாடுகள் ஆராயப்பட்டு ஒரு மேம்படுத்தப்பட்ட யாழ்பாணத்திற்கான ஆறு திட்டம் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் 30000 ஆயிரத்திற்கு மேற்பட்ட விவசாயநிலங்கள் மேம்படுத்தப்படுவதோடு மாதாந்தம் 1 MCM குடிநீருக்குரிய நீர் வழங்கும் ஏற்பாடும் க ாணப்படுகின்றது.

### 3. பாலிஆற்றுத்திட்டம்

மன்னாரில் மிக கணிசமான நீர் பாலி ஆற்றின் ஊடாக கடலை சென்றடைகிறது இந்த ஆற்றிற்கு குறுக்கே அணைகட்டி மிகப்பெரிய குளத்தை அமைப்பதன் மூலம் மன்னார், வவுனியா யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு தேவையான குடிநீரை வழங்குவதுடன் விவசாய நடவடிக்கைக்கும் நீரை பயன்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**4. கடல்நீரை நன்னீராக்கும்திட்டம்**

மருதங்கேணி தாளையடியில் கடற்பரப்பில் நீரை எடுத்து அதனை சுத்திகரித்து நன்னீராக மாற்றி குடிதண்ணீருக்கு வழங்குதல்

## நிலத்தடி நீரை சேமிப்பதற்குரிய நவீன முறைகள்

**1) பண்ணை குளங்கள் அமைத்தல் –** farm ponds (Thuravu)

தோட்டக்காணிகளில் $\frac{1}{3}$ பங்கில் நீரை சேமிப்பதற்காக தாழ்வாக உள்ள பகுதியை வெட்டி அந்த மண்ணை மிகுதியாக உள்ள $\frac{1}{3}$ பங்கில் இட்டு நிரவி மேட்டுக் காணியாக்கி இறுதியாக உள்ள பகுதியில் விவசாயம் செய்யவும் பயன்படுத்தலாம். அதனால் நீரை சேமிப்பதற்கும் விவசாயம் இடம்பெறவும் சிறந்த வழிவகையாக காணப்படுகிறது. இது தற்போது சில நாடுகளில் நடைமுறையில் காணப்படுகிறது.





**2) தண்ணீரை உட்செலுத்தும் அமைப்பு** (Infiltration well or Recharging well)

காணிகளில் தாழ்ந்த இடத்தில் கிடங்கு ஒன்றை வெட்டி அதனுள் பெரிய சல்லி (40mm சல்லி) கல்லை அரைவாசிக்கு நிரப்பி அதற்கு மேல் சிறு சல்லி கற்களை (கிரவல்) இட்டு அதற்கு மேல் பெரிய மணலை போடுதல் வேண்டும். பின்னர் அதனை மூடி போட்டு மூடி நீர் செல்வதற்கு மட்டும் ஓர் வழி விடுதல் வேண்டும். இதனால் நீரானது வடிகட்டி நிலத்தடியில் சேமிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Infiltration wells (Recharge well )**




Reduction of runoff, increasing ground water availability and improving ground water


3. **வீட்டின் கூரையிலிருந்து வழியும் மழை நீரை கிணற்றிற்குள் செலுத்துதல் :**

கூரையிலிருந்து வடியும் மழை நீரை மழை நீர் வழிந்தோடும் பீலி (Cutter) இற்கு ஊடாக செலுத்தல். இதற்காக வீட்டில் கிணற்றின் அருகிலுள்ள தொட்டியில் சிறு கற்களைப் போட்டு அதற்கு மேல் மணலை இட்டு வடிகட்டுவதற்குரிய ஏற்பாடு (Filter Arrangement) செய்தல். கூரையிலிருந்து வடியும் மழை நீரை இணைத்து (Connect) செய்து வடிகட்டி (Filter) இற்கு ஊடாக கிணற்றினுள் செலுத்தல். குழாய் கிணறிற்கும் (Tube Well) இதே மாதிரியான ஒர் முறையை பின்பற்றி நீரை உட்செலுத்தலாம். மழை நீரில் நச்சு வாயுக்கள் ஏதாவது கலந்திருக்கும் என்ற சந்தேகம் ஏற்படின் வடிகட்டி (Filter) இல் சிரட்டைக் கரியை ஒரு படை (Layer) ஆக போடலாம். சிரட்டைக் கரியானது எந்த விதமான நச்சுக்களையும் உறிஞ்சக்கூடியது.

**Recharging Through Dug wells**




Recharge Through Abandoned Dug Well





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) **வீதியோரங்களில் தேங்கும் நீரை சேமித்தல் :**

மழை காலத்தில் வீதியோரங்களில் தேங்கும் நீரையும் நாம் சரியான பொறிமுறையை பயன்படுத்தி நிலத்தடியில் சேமிக்க முடியும்.

2) **மீள்நிரப்பும் நடைமுறை:**


நிலங்களில் பாரிய கிடங்கு போல வட்ட வடிவாக வெட்டி அதனுள் வடிகட்டுவதற்குரிய ஏற்பாடுகள் செய்து மழை நீரை சேமிப்பதன் மூலம் நீரை மீள்நிரப்புகை செய்யலாம்.




அதனை நாம் பாடசாலைகளிலும் மேற்கொள்ளலாம்.

## நீர் முகாமைத்துவம் தொடர்பாக வீடுகளில் கடைப் பிடிக்க வேண்டியவை :

1) **நீர் நிலத்தடிக்கு ஊடுருவ கூடிய வகையில் கல்பதித்தல்** (Water Permeable Paving)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) Rain Water Harvesting – மழைநீர் சேகரித்தல்
2) Infiltration Well – வடிகட்டும் கிணறு
3) Reduce Water Wastage - வீண் விரயத்தை தடுத்தல்

விவசாயத்தில் நீரை மீள்நிரப்புகை:
1) பண்ணை குளங்கள் அமைத்தல் (Farm Ponds)
2) சொட்டு மற்றும் தூவல் நீர்ப்பாசனம் மேற்கொள்ளல்
3) சேதனப் பயிர்ச்செய்கை (Organic Farming)




**நீர் தொடர்பான விழிப்புணர்வு**

இன்றைய காலகட்டத்தில் மக்கள் மத்தியில் நீர் பற்றிய விழிப்பணர்வு ஏற்படுத்தப்படுவது இன்றியமையாததாகும். அந்த வகையில் நாம் பாடசாலை மட்டத்திலும் மற்றும் பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்கும் நீர் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்துதல் அவசியமாகும்.

- நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுவடை செய்ய வேண்டும் என்ற கூற்றுக்கிணங்க நாம் எவ்வளவு நீரை சேமிக்கிறோமோ அதையே மீள பெற்றுக் கொள்ள முடியும்
- நீ எதை எல்லாம் விதைக்கிறாயோ அதையெல்லாம் அறுவடை செய்ய வேண்டும் என்ற கூற்றுக்கிணங்க நாம் நீரை எவ்வாறு மாசுபடுத்தாது பேணி பாதுகாக்கிறோமோ அதற்கேற்றவாறே நாமும் எமதுசந்ததியும் நல்லநீரைப்பெற்றுக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வகம்
## (விழிப்புலவலுவிழந்தோர் இல்லம்)
## சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்
## இலங்கை
## நூலறிவு மேம்பாட்டு ஆண்டு
## 2019 ம் ஆண்டிற்கான உத்தேச நாட்காட்டி

**January**

| | | |
|---|---|---|
| **01/01/2019** | செவ்வாய் | புதுவருட பிரார்த்தனை |
| **06/01/2019** | ஞாயிறு | ஊழியர்களுக்கான கூட்டம்<br>மு.ப 10 மணி |
| **11/01/2019** | வெள்ளி | நிறுவுநனர் உதய நாளும் பரிசுத்தினமும்<br>8.45 மணி |
| **15/01/2019** | செவ்வாய் | தைப்பொங்கல் காலை -7 மணி<br>இனிய இதயங்கள் அமைப்பின்<br>ஒன்று கூடல் பி.ப 5மணி |
| **16/01/2019** | புதன் | பட்டிப்பொங்கல் மாலை 5 மணி |
| **19/01/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |
| **20/01/2019** | ஞாயிறு | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |

**February**

| | | |
|---|---|---|
| **03/02/2019** | ஞாயிறு | ஆசிரியர்,பெற்றோர்களுக்கான கூட்டம்<br>மு.ப 10 மணி |
| **19/02/2019** | செவ்வாய் | முழுநிலா நாள்<br>அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **23/02/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம்<br>பி.ப 4.30 மணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## March

| | | |
|---|---|---|
| 03/03/2019 | ஞாயிறு | வாழ்வக தலைவர் பிறந்த தினம் வாழ்வக சமூகத்தினரின் ஒன்று கூடல் பி.ப 5 மணி |
| 20/03/2019 | புதன் | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| 30/03/2019 | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |

## April

| | | |
|---|---|---|
| 14/04/2019 | ஞாயிறு | தமிழ், சிங்கள, புது வருடப்பிறப்பு கைவிசேடம் - மு.ப 9 மணி |
| 19/04/2019 | வெள்ளி | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| 20/04/2019 | சனி | நிர்வாக சபைக் கூட்டம் 01 பி.ப 4.30 மணி |

## May

| | | |
|---|---|---|
| 01/05/2019 | புதன் | உலக தொழிலாளர் தினமும், வாழ்வக ஊழியர் ஒன்று கூடலும். |
| 11/05/2019 | சனி | முத்தமிழ் விழா – மு.ப 9 மணி |
| 18/05/2019 | சனி | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| 25/05/2019 | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |

## June

| | | |
|---|---|---|
| 01/06/2019 | சனி | ஆசிரியர்,பெற்றோர்களுக்கான கூட்டம் மு.ப 10 மணி |
| 16/06/2019 | ஞாயிறு | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| 29/06/2019 | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**July**

| | | |
|---|---|---|
| **06/07/2019** | சனி | ஆங்கில தினம் மு.ப 9 மணி |
| **14/07/2019** | ஞாயிறு | ஊழியர்களுக்கான கூட்டம் மு.ப 11 மணி |
| **16/07/2019** | செவ்வாய் | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **27/07/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |

**August**

| | | |
|---|---|---|
| **10**,11,12/**08/2019** | | சனி,ஞாயிறு,திங்கள் மாணவர் கல்விச்சுற்றுலா |
| **14/08/2019** | புதன் | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **31/08/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |

**September**

| | | |
|---|---|---|
| **11/09/2019** | புதன | நிறுவுனர் நினைவு நாளும், நினைவுப் பேருரையும் மு.ப 9 மணி |
| **13/09/2019** | வெள்ளி | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **15/09/2019** | ஞாயிறு | கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவாக மஹாளய கிரியைகள் - மு.ப 10.30. |
| **28/09/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |
| **29/09/2019** | ஞாயிறு | நவராத்திரி விரதாரம்பம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## October

| | | |
|---|---|---|
| **06/10/2019** | ஞாயிறு | உலக ஆசிரியர் தினமும், ஆசிரியர் கௌரவிப்பும்,வாணி விழாவும் முத்தமிழ் விழாவும் மு.ப 10 மணி |
| **13/10/2019** | ஞாயிறு | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **15/10/2019** | செவ்வாய் | சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் |
| **26/10/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |
| **27/10/2019** | ஞாயிறு | தீபாவளி பண்டிகை |

## November

| | | |
|---|---|---|
| **10/11/2019** | ஞாயிறு | ஆசிரியர், ஊழியர்களுக்கான கூட்டம் மு.ப 10 மணி |
| **12/11/2019** | செவ்வாய் | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **30/11/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |

## December

| | | |
|---|---|---|
| **01/12/2019** | ஞாயிறு | ஒளி விழா – மு.ப 9 மணி |
| **11/12/2019** | புதன் | முழுநிலா நாள் அறிவுத்தேடல் கருத்தரங்கு |
| **21/12/2019** | சனி | நிர்வாக சபைக் கூட்டம் பி.ப 4.30 மணி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வகக் கீதம்

ஞான ஒளி தரும் வாழ்வகமே வாழி
ஞாலந் தனிலே விழிப்புல வலுவிழந்தோர்க்கு
ஞான ஒளி தரும் வாழ்வகமே.

ஊனக்கண் இழந்தாலும் ஞானக்கண்ணைத் திறந்தே
மௌன மொழி கல்விகலை மேதினியில் ஊட்டி வைக்கும்
ஞான ஒளிதரும் வாழ்வகமே.

அன்பொடு ஆற்றலும் அறிவொடு ஒழுக்கமும்
பண்பொடு பண்பாடும் பயனுறத் தரும் இல்லம்
இன்பமாய் எல்லோரும் இனித்திட வாழ்ந்திட
துன்பமெல்லாம் துடைக்கும் தொண்டுகள் செய்யும் இல்லம்



இயற்றி இசையமைத்தவர்

**மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வக சமூகம்

**021 224 0146,**

**076 8286331.**

சாயி பிறின்டேர்ஸ் - 077 2209474.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org